# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 05 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2022.08.10 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

**(101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகத்திற்கான திருத்தம் (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைக்கான பொதுவான திருத்தமென்பதுடன் அத்திருத்தத்தின் சட்டப்பயனானது முதன்மைச் சட்டவாக்கத்தின் சிங்களமொழி ஏற்பாடுகளில் ''சிறுகோரிக்கை நீதிமன்றம்'' என்னும் சொற்களின் சிங்கள சொற்பதத்தை மாற்றுவதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் LXVI என்பதை (801 முதல் 833ஆ வரையிலானவையும் இரண்டுமுட்பட்டவையும்) நீக்குவதுடன் இத்திருத்தத்தின் சட்டப்பயனானது, சிறுகோரிக்கை நீதிமன்றங்களுக்கான விசேட நடவடிக்கைமுறை தொடர்பான ஏற்பாடுகளை நீக்குவதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணையைத் திருத்துகின்றதென்பதுடன், அத்திருத்தத்தின் சட்டப்பயனானது வாசகம் 2 க்கு செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

## குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

ச.வ.- ஓ. 64/2021

## (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்*

**1.** (1) இச்சட்டம், 2022 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

(2) இச்சட்டத்தின் ஏற்பாடுகள், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்

*101 ஆம் அத்தியாயத்திற்கான பொதுவான திருத்தம்*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (101ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் "சிறுகோரிக்கை நீதிமன்றம்" என்னும் சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்தின் எவையேனும் ஏற்பாடுகளில் இடம்பெறும் இடங்களிலெல்லாம் "சிறுகோரிக்கை நீதிமன்றம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் LXVI னை நீக்குதல்*

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் LXVI (801 முதல் 833ஆ வரையிலானவையும் இரண்டுமுட்பட்டவையுமான பிரிவுகள்) இத்தால் நீக்கப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணையைத் திருத்துதல்*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாவது அட்டவணை அதன் 136ஆம் இலக்க படிவத்தை நீக்கிவிடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.